**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 03.01.2024**

**Case No : CC 88 / 2019**

**Deposition of Witness : P.W. 1**

| | |
|---|---|
| **Name:** ஹேமா | **Caste:** |
| **Father / Husband Name:** லிங்கதுரை | **Calling:** |
| **Village:** இடைச்சிவிளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 45** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 03.01.2024**

முதல் விசாரணை:

நான் இடைச்சிவிளையில் குடியிருந்து ஓட்டல் வைத்து தொழில் செய்து வருகிறேன். புகார்தாரரை தெரியும். என் நண்பரின் மகள் ஆவார். புகார்தாரருக்கு சொந்த ஊர் தேனி ஆகும். எனது வீட்டில் தங்கியிருந்து புகார்தாரர் விவி இன்ஜினியரிங் காலேஜ் படித்து வந்தார். எதிரிகளை தெரியும். எனது ஊரைச் சேர்ந்தவர். கடந்த 5.4.2019 அன்று மாலை 5.30 மணியளவில் புகார்தாரர் ஜெராக்ஸ் எடுப்பதற்காக திசையன்விளை சென்றிருந்தார். ஜெராக்ஸ் கடையில் இருந்து வரும்போது எதிரிகள் அவரை பெயர் சொல்லி அழைத்துள்ளார்கள். புகார்தாரர் அவர்களிடம் என்னவென்று கேட்டபோது ஜாடை காட்டி இங்கே வா என்று சொல்லியுள்ளார்கள். உடனே புகார்தாரர் எதிரிகளை பார்த்து செருப்பு பிய்ந்து விடும் என கூறிவிட்டு வீட்டிற்கு வந்து என்னிடம் அழுதுகொண்டே சொன்னார். பின்பு மாலை 6.00 மணியளவில் நானும் புகார்தாரரும் வீட்டில் இருந்தோம். அப்போது எதிரிகள் அங்கு வந்து சத்தம்போட்டு தேவடியா மகளே என ஆபாசமாக திட்டி புகார்தாரரை வெளியே வரும்படி அழைத்தார்கள். சத்தம் கேட்டு நானும் என்னுடன் தியாகேஸ்வரி என்பவரும் வெளியே வந்தோம். அப்போது எதிரிகள் புகார்தாரரை கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். மேலும் புகார்தாரரை வேறோரு பையன் உடன் பார்த்ததாக அசிங்கமாக பேசினார்கள். நாங்கள் எதிரிகளை சத்தம்போட்டோம். பின்பு அவர்கள் திட்டிக்கொண்டே சென்றுவிட்டார்கள். இந்த சம்பவத்தை புகார்தாரர் அவர் பெற்றோரிடம் கூறினார். அவர்கள் மறுநாள் வந்தவுடன் காவல்நிலையத்தில்

இதுசம்பந்தமாக புகார்தாரர் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 03.01.2024**

**Case No : CC 88 / 2019**

**Deposition of Witness : P.W. 2**

| | |
|---|---|
| **Name:** தியாகேஸ்வரி | **Caste:** |
| **Father / Husband Name:** சக்திவேல் | **Calling:** |
| **Village:** இடைச்சிவிளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 54** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 03.01.2024**

<u>முதல் விசாரணை:</u>

நான் இடைச்சிவிளையில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். எனது ஊரைச்சேர்ந்தவர். புகார்தாரரை தெரியும். அ.சா.1 ன் வீட்டில் தங்கியிருந்து வருகிறார். எதிரிகளை தெரியும். என் ஊரைச்சேர்ந்தவர்கள். கடந்த 5.4.2019 ம் தேதி மாலை 5.30 மணியளவில் புகார்தாரர் திசையன்விளைக்கு ஜெராக்ஸ் எடுக்க சென்றபோது எதிரிகள் புகார்தாரரை கண்ணசைத்து வா என்று அழைத்துள்ளார்கள். அதற்கு புகார்தாரர் எதிரியை பார்த்து செருப்பு பிய்ந்துவிடும் என சொல்லியுள்ளார். பின்பு அவர் சம்பவத்தை வீட்டிற்கு வந்து அ.சா.1 யிடம் அழுதுகொண்டே சொல்லியுள்ளார். நாங்கள் இதுசம்பந்தமாக பேசிக்கொண்டிருந்தோம். அப்போது மாலை 6.00 மணியளவில் எதிரிகள் அங்கு வந்து புகார்தாரரை வெளியே வா உன்னை காலிசெய்து அசிங்கப்படுத்துவேன் என்று மிரட்டினார்கள். நானும் அ.சா.1 ம் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தோம். எதிரிகள் தேவடியா என்று ஆபாசமாக பேசினார்கள். சம்பவத்தை நானும் அ.சா.1 ம் மற்றும் அருகிலிருந்தவர்களும் சத்தம்போட்டு விலக்கிவிட்டோம். அவர்கள் திட்டிக்கொண்டே சென்று விட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me in the open court to the presence of the

Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.